பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 27 புதன்கிழமை 09.02.2022 கதிர் 96

### இது ரகசியம் அல்ல!

இப்போது எங்களின் பத்திரிகையாளர் பணி எவ்வளவு கஷ்டமானது, கத்தி மேல் நடப்பது போன்றது என்பதை ஓர் உதாரணம் மூலம் வாசகர்களுடன் பகிர விரும்புகின்றேன்.

முன்னர் ஒரு காலத்தில் செய்தியாளர்கள் எழுதி ☞2

# சுயலாப அரசியலுக்காகத் தமிழரை நட்டாற்றில் விட முயற்சிக்காதீர்கள்!



## 13 இற்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவோருக்குச் சம்பந்தன் எச்சரிக்கை

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வோர் தமிழ் மக்களின் நன்மை கருதிச் செயற்பட வேண்டும். தமது சுயலாப அரசியலுக்காகத் தமிழ் மக்களை நட்டாற்றில் விடும் வகையில் அவர்கள் செயற்படக்கூடாது.

– இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

13ஆவது திருத்தத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது படுமுட்டாள்தனமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பில் முதன் முறையாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதைத் தேசிய இனப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக ஏற்கமுடியாது. இதைத் தீர்வுக்கான முதல் படியாக வைத்துக்கொண்டு நாங்கள் முன்னோக்கி ☞9

# இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடிப்பதை உடனடியாக நிறுத்துக!

## தமிழகத்தின் தொப்புள் கொடி உறவுகளிடம் டக்ளஸ் வேண்டுகோள்



தமிழகத்துடனான தொப்புள் கொடி உறவைப் பலப்படுத்த விரும்புகின்ற அதேவேளை, இலங்கைக் கடற்பரப்பில் இழுவைமடி வலைத் தொழிலில் ஈடுபடுவதை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் என்பதிலும் உறுதியாக இருக்கின்றோம்.

– இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. ☞9

## 52 இந்திய மீனவர்கள் நாளை நாடு திரும்புவர்

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்ட 56 இந்திய மீனவர்களில் 52 பேர் நாளை நாடு திரும்புகின்றனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட 56 மீனவர்களில் 55 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து ☞9

## இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து கொழும்பில் போராட்டம்!



(ந.லோகதயாளன்)

வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து, கொழும்பிலுள்ள கடற்றொழில் அமைச்சுக்கு முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ☞9

## ‘திருமலை எண்ணெய் குதங்கள்’ ஒப்பந்தம் சபையில் முன்வைப்பு

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் தொடர்பான ஒப்பந்தத்தை வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அந்த ஒப்பந்தத்தைச் சபையில் சமர்ப்பித்து அவர் உரையாற்றும்போது, அரச பெற்றோலிய கூட்டுத்தாபனம், இந்தியன் நிறுவனம் மற்றும் டிரிங்கோ பெற்றோலியம் டெர்மினல் ஆகியவற்றுடன் 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ☞9

## காங்கேசன்துறையில் 5 இந்தியப் படகுகளும் 4 இலட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலம்

(ந.லோகதயாளன்)

யாழ்., காங்கேசன்துறையில் இருந்த 5 இந்தியப் படகுகளும் நேற்று 4 இலட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

இலங்கைக் கடற்பரப்புக்குள் ☞9



## தங்கம் வென்ற முல்லையின் மங்கையை நேரில் வாழ்த்திய எதிர்க்கட்சித் தலைவர்



பாகிஸ்தானில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று இலங்கைக்குப் பெருமையைத் தேடித் தந்த முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனை கணேஷ் இந்துகாதேவி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று நேரில் சந்தித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதிய நகரில் பிறந்து உறுதி, அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சியின் ☞9

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எகிறும் கொரோனா பரவல்

### மாவட்ட செயலர் அபாய எச்சரிக்கை

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா பரவல் அதிகரித்துச் செல்கின்றது எனவும், இது ஆரோக்கியமானது அல்ல எனவும் மாவட்ட செயலர் ☞9

## ஒரே நாளில் 35 பேர் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர் களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது. ☞9

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுப்பும் செய்திகள், உத்தியோகபூர்வ செய்தி ஏஜென்ஸிகள், வானொலிகள் போன்றவை மூலம் கிட்டும் – ஆதாரம் கொண்ட – செய்திகளை மட்டுமே நாம் கையாள வேண்டியிருந்தது.

இப்போது நவீன தொழில்நுட்ப விருத்தி காரணமாக இணையத் தளங்கள், சமூக ஊடகங்கள் என்று மின்னிக் கொண்டு பல வந்துவிட்டன. இவற்றுக்கு நடுவில் உண்மைச் செய்திகளை, ஆதாரபூர்வத் தகவல்களை உரசிப் பார்த்துத் தேர்வது என்பது பல சமயங்களில் மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலை. 'அவிச்ச இறால் துடிக்குது' என்பார்களே, அது போல் செய்திகள் வெளிவரும். அவற்றை நம்புவதா, ஆதாரம் தேடி உறுதிப்படுத்தலாமா என்று அலைவது நமது தினசரி சிக்கலாகி விட்டது.

உதாரணத்திற்கு ஒன்றைத் தருகிறேன். உதாரணத்திற்காக அதை சமர்ப்பிக்கிறேனே தவிர, உண்மையான செய்தியாக அல்ல. இந்தச் செய்தியை எழுதியவர் – இல்லை, இல்லை இப்படித் திரிந்தவர் – ஊடகத் துறையிலிருந்தே அடித்துத் துரத்தப்பட வேண்டியவர். அவ்வளவு கனகச்சிதமாக அதனைத் திரித்திருக்கின்றார்.

யுத்த காலத்தில் கறுப்புப் பணம் மூலம் வடகொரியாவிடம் இருந்து ஆயுதக்கொள்வனவு செய்தோம்' – என்ற இலங்கை நீதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கூற்று ஏற்படுத்திய சர்ச்சையும், அதற்கு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் விடுத்த மறுப்பும் பிரசித்தம்.

அத்தகைய உணர்வுபூர்வ விவகாரத்தில் புகுந்து விளையாடி, கையால், மடியால் போட்டு ஒரு செய்தி முக்கியமான தமிழ் இணையத் தளம் ஒன்றில் நேற்று வெளியானது. கனகச்சிதமாக – திட்டமிட்டு – கற்பனையில் தயார் பண்ணப்பட்டு – இறக்கப்பட்ட செய்தியாக இருக்கும் என்று நினைக்கிறேன். எங்கு தேடியும் அந்தச் செய்தியின் மூலத்தைக் கண்டறிய முடியவில்லை. ஓர் இழை கூடக் கிடைக்கவில்லை.

இதற்கிடையில், ஏனைய தமிழ் வாசகர்கள் போல, எனது உதவி ஆசிரியர் ஒருவரும் இந்தச் செய்தியை உண்மை என்று நம்பி, அதனை செய்திப் பக்கத்தில் சேர்த்தும் விட்டார். நான் தலையிட்டு செய்தியை அப்புறப்படுத்த வேண்டியதாயிற்று. இனிச் செய்தியை அப்படியே தருகிறேன். அது வருமாறு:–

"வடகொரியாவிடம் ஆயுதம் வாங்கிய நடவடிக்கை சட்டவிரோதமானது அல்ல. எனது இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழர் தரப்புக்கள் சர்வதேச விசாரணையை ஒரு போதும் கோர முடியாது" – என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"இறுதிக்கட்டப் போரின்போது கறுப்புப் பணத்தை பயன்படுத்தி வடகொரியாவிடம் ஆயுதங்கள் வாங்கியதாக நீங்கள் தெரிவித்த கருத்தை போர்க்குற்ற ஒப்புதல் வாக்குமூலமாகக் கருதி சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமிழர் தரப்புக்கள் வலியுறுத்துகின்றன. இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?" என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம், சர்வதேச ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த பஸில் ராஜபக்ஷ, இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் –

"தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் உச்சம் பெற்ற காலப்பகுதியில் கறுப்புச் சந்தையில் கிடைத்த பணத்தைப் பயன்படுத்தியே இலங்கை வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களை வாங்கியது என்ற கருத்தை நான் ஒருபோதும் மீளப்பெற்றுக் கொள்ள போவதில்லை.

"அன்று நடந்த உண்மையைத்தான் இன்று கூறினேன். அது சட்டவிரோத நடவடிக்கை அல்ல. அதை எம்மால் எந்தச் சந்தர்ப்பத்திலும் நியாயப்படுத்த முடியும். எனினும், இந்தக் கருத்தை ஊடகங்கள் என்னிடம் திரும்பத் திரும்பக் கிளறுவதை நான் விரும்பவில்லை.

"சர்வதேசப் பிரச்சினையை எழுப்ப நான் விரும்பவில்லை. எனது கருத்தைத் தமிழ்த் தரப்பினர் அல்லது புலம்பெயர் தரப்பினர் சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்த முடியாது.

"ஏனெனில், பயங்கரவாதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கவே அன்று ஆயுதங்களைக் கொள்வனவு செய்தோம். நாம் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் செய்ய ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவில்லை" – எனவும் இதன்போது பதில் வழங்கியுள்ளார்.

– இதுதான் அந்தச் செய்தி.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ எந்த சர்வதேச ஊடகத்துக்கு, எப்போது இப்படித் தெரிவித்தார்?

நான் ஒரு மூத்த ஊடகவியலாளன். எனக்கு தமிழ் ஊடகவியல் உலகில் ஒரு தார்மீக உரிமை உண்டு என்று நினைக்கிறேன். இந்தச் செய்தியை வெளியிட்ட இணையத்தளங்கள் – தங்களை நம்பகமான இணையத் தளங்களாக வளர்த்துக் கொண்டிருக்கின்றன என்று தங்களைத் தாங்களே நம்பினால் – இந்தச் செய்தியின் உண்மைத் தன்மையை – மூலத்தை – வெளிப்படுத்த வேண்டும். அதனைக் கோரும் உரிமை எனக்கு உண்டு என்று கருதி இக்கருத்தை முன்வைக்கிறேன்.

இது, பஸில் ராஜபக்ஷவுக்கு வக்காலத்து வாங்கும் விவகாரம் அல்ல. தமிழ் வாசகர் உலகத்தை முட்டாள்தனமான மையம் என்று கருதி, கதை அளக்கும் சில தரப்புகளின் நடவடிக்கையை அம்பலப்படுத்தும் முயற்சி.

உணர்வுபூர்வமான – தமிழ் மக்கள் தங்கள் எதிர்காலத்துக்கு ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டிய – விடயம் இது. இதில் பொய்களைப் புனைந்து, கதைகளைச் சொருகி, அந்த முயற்சிகளை மண்ணாக்கும் கோடரிக் காம்பு வேலை இது.

இத்தகைய போக்கினால்தான் ☞9






# தேர்தலுக்காக தனியார் துறை ஊழியர்களிடமிருந்து 7 ஆயிரம் கோடி ரூபாவை எடுத்துக்கொள்ள அரசு முயற்சி

## ஹர்ஷ டி சில்வாசாடல்



ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு நிதி என்பவற்றை மேலதிக வரிச் சட்டமூலத்தில் உள்ளடக்குவதற்கான சரத்துக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன எனத் எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

மேலதிக உபரி வரிச் சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்ட நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இதனைக் கூறியுள்ளார்.

2020 ஏப்ரல் 1, இல் தொடங்கும் மதிப்பீட்டு ஆண்டில் இருந்து ஊழியர் சேமலாப நிதியம் உட்பட பல நிதிகளுக்கு 25 வீதம் மேலதிக கட்டணம் விதிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

சட்டமூலத்தின்படி, ஓய்வூதிய நிதியம், வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியக் கொடுப்பனவு நிதி அல்லது அதற்கு இணையான நிதியொன்று கம்பனியின் வரையறைக்குள் உள்ளடக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் ஈ.பி.எவ். மற்றும் ஈ.ரி.எவ். இலாபங்களுக்கு 25 வீத வரியை விதித்துள்ளது என ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

மேலும் உள்ளூராட்சி தேர்தல் பிரச்சாரத்துக்காக தனியார் துறை ஊழியர்களிடமிருந்து 7 ஆயிரம் கோடி ரூபாயை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முயற்சிப்பதாக கூறினார்.

குறிப்பாக அந்த பணத்தை பிரதேச சபை உறுப்பினர்கள் மூலம் விநியோகிக்க ஆளும் கட்சி திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# மனிதப் பண்பியல்புகளோடு ஆளுமையுள்ள ஒரு நல்ல சமுதாயம் உருவாகவேண்டும்!

## வேலன் சுவாமிகள் கோரிக்கை

மனிதப் பண்பியல்புகளோடு ஆளுமையுள்ள ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டிய தூர நோக்கில் அறநெறிப் பாடசாலைகள் அமைந்துள்ளன என்று வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

யாழ் நெடுந்தீவு செல்லம்மாள் வித்தியாலய வளாகத்தில் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் செல்லம்மாள் ஞாபகார்த்த அறநெறி பாடசாலை மற்றும் செல்லம்மாள் ஞாபகார்த்த முன்பள்ளி ஆகியவற்றுக்கான அடிக்கல் நாட்டு விழா திங்கட்கிழமை நடைபெற்றது இதில்



சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறுவர்களுக்கு ஆரம்பக் கல்வியை மேம்படுத்தவும் அறநெறியைப் போதிப்பதற்காகவும் எடுக்கப்படும் இந்த முயற்சி சிறப்பாக அமைய வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு இன்று நமது மண் ணிலேயே சிறுவர்களை இளம் சந்ததியினரை நல்ல வழியில் ஆன்மீக ரீதியில் வழி காட்டி வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பில் அனைவரும் இருக்கின்றோம்.

எமது பண்பாடு, கலை, கலாசார விழுமியங்களைப் பேனக் கூடிய விதத்தில் மனிதப் பண்பியலோடு ஆளுமையுள்ள ஒருநல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டிய தூர நோக்கில் இந்த அறநெறிப் பாடசாலைகள் முக்கிய பாகங்களை வகிக்கின்றன.

அந்த வகையிலேயே நெடுந்தீவு மண்ணில் இருக்கக்கூடிய சிறார்களுக்கு எமது பண்பாட்டு கலாசார விழுமியங்களை எடுத்துச் செல்லக் கூடிய வகையில் இந்த அறநெறி பாடசாலை அமைய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




Sri Mahakaliamman Devasthanam,
Valaithoddam,Iyakkachchi Temple Trust

ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயம்

ஆலய நிர்வாக உத்தியோகத்தர் தேவை

இயக்கச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயத்துக்கு இந்து மதத்தைச் சேர்ந்த, ஆலய வழிபாடுகளில் ஈடுபாடுள்ள, சமூகசேவை மனப்பான்மையுள்ள நிர்வாக உத்தியோகத்தர் தேவை .

ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆலயத்தை அறங்காவலர் சபையின் வழி காட்டலுக்கேற்ப நிர்வகித்து நித்திய பூசைகளை குறிப்பிட்ட நேரத்திற்கு நடாத்தி ஆலய உற்சவங்களையும், சிறப்பு பூசைகள் ஆகியவற்றையும் ஆகம முறைப்படி நடைபெறுவதை உறுதி செய்வதும் பிரதான கடமைகளாகும்.

ஆலய செயற்பாட்டுக்குத் தேவையான முழு நிர்வாகத்தையும் பொறுப்புடன் ஏற்றுச் செயற்படுவது இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கபடும் நபரின் கடமையாகும்.

ஆலயத்தின் அண்மித்த பகுதியில் வாழும் மக்களின் சமய சமூக கல்வி மேம்பாட்டுக்கு உதவுவதும் இந்த நிலைக்குரிய பணியாகும்.

ஆலயம் அமைய்ந்துள்ள அண்மித்த பகுதியிலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படினும், மற்றைய பிரதேசங்களிலிருந்து கிடைப்பவையும் சமமாக பரிசீலிக்கப்படும்.

ஆலயத்தோடு மிகுந்த ஈடுபாடுள்ள, தேர்ந்தெடுக்கப்படும் நபருக்கு தகுந்த ஊதியமும் வழங்கப்படும் .

தொடர்பு கொள்ளவும் :
மின்னஞ்சல் : sr@isfindustries.com
தொலைபேசி : 077 207 8455
தபாலில் : 34 , Rockwood Place , Colombo 07.


# நாடாளுமன்றத்தில் நேற்று சஜித் - ஜோன்ஸ்டன் தர்க்கம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் அரசாங்கத்தின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுடன் இடையில் நேற்று நாடாளுமன்றத்தில் கடுமையான வாய்த்தர்க்கம் இடம்பெற்றது.

நாடாளுமன்ற அமர்வுகளை நடத்திக் கொண்டிருந்த நாடாளுமன்ற பிரதிக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதனையும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமதாஸ கடுமையாக சாடியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை, அந்நிய செலாவணி நெருக்கடி உள்ளிட்ட 11 கேள்விகளை நிதி அமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பியிருந்தார்.

மேலும் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த நிதி அமைச்சு எடுத்த நடவடிக்கை, பணவீக்கத்துக்கான காரணங்கள் மற்றும் பிற முக்கிய பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளிக்காதமை காரணமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் அரசாங்கத்தின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுடன் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் இடம்பெற்றது.

தேர்தல் காலத்தில் சட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டல் செய்யும் நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என சுட்டிக்காட்டியுள்ளார்.

# டிஜிற்றல் அடையாள அட்டைக்கு இலங்கைக்கு இந்தியா உதவி!

இலங்கையில் அமுல்படுத்தப்படவுள்ள டிஜிற்றல் அடையாளத் திட்டத்துக்கு இந்திய உதவியை பெறுவதற்கு இரு நாடுகளும் உடன்படிக்கைக்கு வரவுள்ளன.

அதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

நாட்டிலுள்ள தனிநபர்களின் பயோமெட்ரிக் தரவுகளின் அடிப்படையில் தனிநபர்களின் அடையாளத்தைச் உறுதிப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

டிஜிற்றல் மற்றும் உடல் சூழல்களில் ஒருவரின் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய அடையாளங்காணல் இந்த டிஜிற்றல் அடையாள கட்டமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

2019 டிசெம்பரில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையே நடந்த இருதரப்பு சந்திப்பில், டிஜிற்றல் அடையாள கட்டமைப்பை செயல்படுத்துவதற்கு நிதியுதவி வழங்க இந்திய அரசு இணக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இந்த ஆண்டுக்குள் நடத்த முடிவு

இந்த ஆண்டு இறுதிக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

எந்தவொரு நேரத்திலும் தேர்தலை நடத்துவதற்கு தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் நடத்தப்பட்டால் அது சுகாதார வழிமுறைகளை பின்பற்றியே மேற்கொள்ளப்படும்.

தேர்தல் நடத்துவது தொடர்பாக உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல், வாக்குச் சாவடிகள் நிறுவுதல் தொடர்பான ஆரம்ப கட்ட பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முஸ்லிம் தலைவர்களின் பதில் என்ன?

மனிதப் பண்பியல்புகளுக்கே கேடான இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் சர்வதேச கண்டனத்துக்கும், மோசமான விமர்சனத்துக்கும் உள்ளாகி வரும் சூழலில் அதனைத் தொடர்ந்து தக்க வைப்பதில் பல நெருக்கடிகளை இலங்கையின் எதேச்சாதிகார ஆட்சிப் பீடம் எதிர்கொண்டு வருகின்றது.

இந்தச் சட்டத்தை சீர்திருத்தி, மாற்றியமைப்பதாக முன்னைய நல்லாட்சி அரசு சர்வதேச சமூகத்துக்கு வாக்குறுதியளித்திருந்த பின்னணியில் – அது தொடர்பில் ஆக்கபூர்வமான பல முன்முயற்சிகளை கணிசமானளவுக்கு அந்த அதிகாரபீடம் எடுத்திருந்த நிலையில் – தொடர்ந்து பதவிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ அரசு அவற்றை எல்லாம் வாரிக் கடாசி குப்பையில் எறிந்து விட்டது.

மிகக் கொடூரமான – குரூரமான – நாகரிகமுறைமைகளுக்கே மாறான – இந்தச் சட்ட விதிகளைக் கைவிடாமல் அதன் மூலம் தனது எதேச்சாதிகார நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கவே அது விழைகின்றது.

ஆனால், அந்தப் போக்கின் தொடர் விளைவாக இரண்டு பெரும் நெருக்குவாரங்களை கொழும்பு ஆட்சிப் பீடம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது யதார்த்தமாகியிருக்கின்றது.

ஒன்று – விரைவில் ஜெனிவாவில் கூடவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 49ஆவது கூட்டத் தொடரில் கடுமையான – தாக்கமான – விளைவுகளை கொழும்பு எதிர்கொள்ள வேண்டி நேரும்.

அடுத்தது – ஐரோப்பிய ஒன்றியத்தின் கையில், காலில் விழுந்து, மன்றாடி, பல உறுதிமொழிகளை அளித்து, நல்லாட்சி அரசு மீட்டுக் கொண்டு வந்த ஜி.எஸ்.பி. வரிச் சலுகை என்ற ஏற்றுமதி வாய்ப்பை இலங்கை மீண்டும் இழக்கும் நிலைமை ஏற்படும்.

அப்படி ஐரோப்பிய ஒன்றியத்தின் அந்தச் சலுகையை நாடு இழக்குமானால் கொஞ்ச நஞ்சம் கிட்டும் அந்நிய செலாவணி அப்படியே படுத்து விடும். நாடு மீள முடியாத வங்குரோத்து நிலையை விரைந்து அடைந்து விடும். நாடும், மக்களும், ஆட்சியாளர்களும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத இழி நிலையை அது ஏற்படுத்தும்.

மனித குல மாண்புகளுக்கு மாறான ஒரு குரூர சட்டத்தைத் தாங்கள் கையில் வைத்திருந்து, அதன் மூலம் மேற்கொள்ளும் கொடுங்கோன்மை செயற்பாடுகளே இந்த இக்கட்டுக் காரணம் என்பதை நன்கு புரிந்து கொண்டுள்ள ராஜபக்ஷ அரசு, தனது எடுபிடிகளான வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் போன்றோர் மூலம் இந்தக் கேவலமான பயங்கரவாத சட்டத்தைச் சீர்திருத்தி, புதுக்கி, மாற்றங்களைக் கொண்டு வந்து, மேம்படுத்துவதாக சர்வதேச சமூகத்துக்கு படம் காட்ட முயற்சிக்கின்றது.

பயங்கவரவாதத் தடுப்புச் சட்ட சீர்திருத்தம் என்ற பெயரில் வெளிவிவகார அமைச்சு சமர்ப்பித்து, வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்கும் சட்டத் திருத்த வடிவம் இத்தகைய பூசி மெழுகலுக்கான நகாசு வேலைதான்.

இந்தச் சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட முதல் சிறுபான்மையினமான தமிழ்த் தேசிய இனம், இந்தச் சட்டத்தையும், அதைத் திருத்துவதாக ஆளும் தரப்புக் காட்டும் நகாசு – நடிப்பு – வேலையையும் பகிரங்கமாக, வெளிப்படையாக அம்பலப்படுத்தி, அதற்கு ஒன்றுபட்டு எதிர்ப்பையும் காட்டியுள்ளது.

ஆனால், இந்தச் சட்டத்தினால் அண்மைக் காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டு வரும் மற்றொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் பக்கத்திலிருந்து இந்தச் சட்டத்துக்கு – அதன் நடைமுறையாக்கத்துக்கு – அதைச் சீர்திருத்துவதாக இப்போது காட்டப்படும் பம்மாத்து நடவடிக்கைக்கு – இன்னும் முழு அளவில் எதிர்ப்பு வெளிப்படுத்தப்படவில்லை. முஸ்லிம் தலைவர்கள் இவ்விடயத்தில் ஒளித்துப் பிடித்து விளையாடுகின்றார்கள். இப்போது அரங்கேற்றப்படும் சீர்திருத்த நடவடிக்கை என்ற சட்டத் திருத்த 'சுத்துமாத்தை' அவர்கள் ஆதரித்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

என்ன செய்யப் போகிறார்கள் முஸ்லிம் தலைவர்கள்?

# நாட்டின் பொருளாதார நிலைமை பற்றி பகிரங்க விவாதம் நடத்த நாம் தயார்

## ஹர்ஷ டி சில்வா அழைப்பு



நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாகப் பகிரங்க விவாதம் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் தெரிவித்தவை வருமாறு-

ஜனாதிபதி பதவி கேட்டார்கள் அதனை பெற்றுக் கொண்டார்கள், ஜனாதிபதியின் அதிகாரம் போதவில்லை என 20 ஆம் திருத்தச் சட்டம் கொண்டு வந்து அதிகாரம் விஸ்தரிக்கப்பட்டது.

பின்னர் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் தேவையென்று கோரப்பட்டது. அதுவும் வழங்கப்பட்டது.

பின்னர் அமெரிக்கப் பிரஜையான பஸில் ராஜபக்ஷவை அரசியல் அமைப்பு திருத்தங்களின் மூலம் நிதி அமைச்சராக நியமித்துக் கொண்டனர்.

இதனை விட எதனையும் மக்களால் கொடுக்க முடியாது. எனினும் இன்னும் நாட்டில் பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்படவில்லை. நாட்டு மக்கள் எதிர்பார்ப்பு இழந்து காணப்படுகின்றனர்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்பாகப் பகிரங்க விவாதம் ஒன்றை நடத்த நாம் தயார். சிவில் அமைப்புக்கள், ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் ஒரே இடத்தில் அமரச் செய்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விவாதம் ஒன்றை நடத்தத் தயார் என ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

# பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு போராட்டம்!

## யாழில் நடந்தது



பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில் பழைய மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது பெண்கள் சிறுவர்களின் உரிமையைப் பாதுகாத்தல், அதிகரித்து வரும் விலைவாசியைக் கட்டுப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோங்களும் எழுப்பப்பட்டன.

தொடர்ந்து போராட்டக்குழுவினர் ஏ9 வீதி ஊடாக மாவட்ட செலகம் வரை சென்று கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மத்திய வங்கியின் தங்க கையிருப்பு முடிவடையும் தருவாயிலில் உள்ளது

இலங்கை மத்திய வங்கியின் தங்க கையிருப்பு முடியும் தருவாயில் காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்நிய செலாவணி கையிருப்பு சிக்கல் காரணமாகக் கடந்த மாதம் மத்திய வங்கி ஒரு தொகுதி தங்க கையிருப்பை விற்பனை செய்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் மத்திய வங்கியிடம் 175 மில்லியன் டொலர் தங்க கையிருப்பு காணப்பட்டது எனவும், அது கடந்த மாதம் 92 மில்லியன் டொலராகக் குறைவடைந்தது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலும் தங்க கையிருப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது. கடந்த டிசெம்பர் மாத இறுதியில் இலங்கை மத்திய வங்கியிடம் 3.1 தொன் எடையுடைய தங்கம் கையிருப்பில் இருந்த போதிலும், ஜனவரி மாதமும் தங்கம் விற்பனை செய்த காரணத்தால் தற்போதைய கையிருப்பு 1.6 தொன்னாகக் குறைவடைந்துள்ளது என தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# திருப்பதிக்கான மஹிந்தவின் ஜெட் விமானப் பயணம் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை

தனிப்பட்ட ஜெட் விமானம் மூலம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் திருப்பதி விஜயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள லஞ்ச ஊழல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

லஞ்ச ஒழிப்பு சட்டத்தை மீறி தனியார் ஜெட் விமானத்தைப் பரிசாக ஏற்றுக் கொண்டதன் மூலம் பிரதமர் லஞ்சம் பெற்றாரா என்பதை உறுதி செய்யும் வகையில் விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளது.

2021 டிசெம்பர் 31 ஆம் திகதி ஊடகவியலாளர் தரிந்து உடுவகெதரவால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜெட் விமானம் மூலமான பயணம் தொடர்பான செய்திகள் பரவியதை அடுத்து, பிரதமரின் நெருங்கிய சகா ஒருவரால் இது பரிசளிக்கப்பட்டது என பிரதமரின் தலைமை அதிகாரி யோஷித ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

# கிருபாகரனினால் வெளியிடப்பட்ட ஆவணம் 'நீதியை நோக்கி யதார்தங்களும் வெளிப்பாடும்'

மனித உரிமை ஆர்வலரும், சுதந்திரமான பகுப்பாய்வு ஆய்வாளருமான ச.வி.கிருபாகரன் - (கிருபா) 'நீதியை நோக்கி யதார்தங்களும் வெளிப்பாடும்' (ஒரு சமூக-அரசியல்-வரலாற்று முன்னோக்கு) என்ற ஆவணத்தை ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் வெளியிட்டுள்ளார்.

ஐரோப்பாவில் திடீரென ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் காரணமாக, பிரெஞ்சு தலைநகர் பாரிஸில், ஜனவரி 14 ஆம் திகதி, நன்கு அறியப்பட்ட மனித உரிமை ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் சகிதம் நடைபெறவிருந்த இந்த ஆவண வெளியீடு, காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், ஐரோப்பாவிலும் பிரித்தானியாவிலும் சில முக்கிய நபர்களிடம் ஆங்கிலம், தமிழ் பிரதிகள் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த ஆவண விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'நீதியை நோக்கி யதார்தங்களும் வெளிப்பாடும்' என்று பெயரிடப்பட்ட இந்த ஆவணம், பல தசாப்தங்களாக கிருபாகரனால் ஆங்கிலம், தமிழ் மொழிகளில் எழுதப்பட்ட கட்டுரைகள் உள்ளடக்கியுள்ளதுடன், இவை உலகில் நன்கு அறியப்பட்ட அச்சு ஊடகங்கள் மற்றும் மின் ஊடகங் களில் வெளியிடப்பட்டவை.

இந்த ஆவணத்தை கிருபாகரன் தனது பெற்றோர் - இலங்கை கல்வி அமைச்சின், கல்வி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற ஆலோசகர் மறைந்த ச. விசுவலிங்கம், மறைந்த பத்மாசனி விசுவலிங்கம் ஆகியோருக்கும் - இந்த ஆவணத்தை வெளியிட ஊக்குவித்து உதவிய, தனது மனைவி டியேற்றி மக்கோனாலிற்கும் அர்ப்பணித்துள்ளார். ஆவணத்தின் அட்டைப் படத்தை, டியேற்றி, இவரது சிந்தனைக்கு ஏற்ற முறையில், 'கிருபாவும் அவரது பாதுகாவலர்களும்' என்ற பொருள்பட வடிவமைத்துள்ளார்.

ஆங்கிலம் மற்றும் தமிழ் பதிப்புகள் இரண்டிலும், ஒரே மாதிரியாக கட்டுரைகளைக் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடதக்கது.

ஆவணத்தில் உள்ளடக்கங்கள் (1) ஐ.நா.சபையும் சர்வதேச விவகாரமும் (2) சிறிலங்கா விவகாரங்கள் (3) இந்தியா விவகாரங்கள் (4) வேறு விவகாரங்கள் (5) ஊடகம் (புகழ்ச்சி, விமர்சனம் ஆகிய இரண்டும்) மற்றும் தனது இளம் வயது ஆக்கங்கள் எழுத்துக்கள் உட்பட பழைய புதின பத்திரிகையில் வெளியான இவரது விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நூல் வருங்கால சந்ததியினருக்கு தகவல்களை வழங்குவதற்காகவும், இலங்கையில் இனப் பிரச்சினை பற்றி அறிந்தவர்களுக்கு மேலதிக தகவல்களை வழங்குவதற்காகவும், இலங்கையில் இனப்பிரச்சினைக்கு சாத்தியமான வழிகளைத் தேடும் வகையில், இந்த ஆவணம் உதவக்கூடிய முறையில், வெளியிடப்பட்டுள்ளது எனக் கிருபாகரன் கூறியுள்ளார்.

கிருபாகரன், ஐரோப்பா, பிரித்தானியா மற்றும் வேறு நாடுகளில் உள்ள பல நன்கு அறியப்பட்ட ஊடகம் மற்றும் மனித உரிமைகள் சங்கங்களில் நீண்ட கால உறுப்பினர் என்பது குறிப்பிடதக்கது. இவர் 1990 இல் பிரான்சில் நிறுவப்பட்ட தமிழர் மனித உரிமை மையத்தின் - வுஊர்சுன் ஸ்தபாக பொதுச் செயலாளர் ஆவார். இதன் ஆங்கில நூலிற்கு - பேராசிரியர் நிகால் ஜெயவிக்கிரமா, பேராசிரியர் வே. இலகுபிள்ளை, சந்திமா வித்தானகே ஆகியோர் ஒப்புதல்களை வழங்கியுள்ளனர்.

பேராசிரியர் நிகால் ஜெயவிக்கிரமா, இலங்கை நீதி அமைச்சின் முன்னாள் நிரந்தரச் செயலாளராகவும், சட்டத்துறை இணைப் பேராசிரியராகவும் கடமையாற்றுவதுடன், ஐ.நா.வின் ஒரு சுதந்திர சட்ட நிபுணராவார். - பேராசிரியர் வே. இளகுப்பிள்ளை, கனடாவின் கார்ல்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும், மலேசியா பினாங்கு பல்கலைக்கழகம், சாம்பியா பல்கலைக்கழகம் மற்றும் கனடா அணுசக்தி ஆணையத்தின் (ஓய்வு பெற்ற) மூத்த விஞ்ஞானிமாவர் - சந்திமா வித்தானகே நிர்வாக ஆசிரியர், லங்கா நியூஸ் இணையதளம் லண்டன் , கொழும்பு.

தமிழ் நூலிற்கான ஒப்புதல்களை - 'வீரகேசரி வார இதழ்' பிரிவின் முன்னாள் தலைமை ஆசிரியரும், ஏழஷ்உந ழக றழசடன அநனயை நேவறழசம தலைமை ஆசிரியரும் இயக்குநருமான, திரு. வி. தேவராஜ் - மூத்த பத்திரிகையாளரும் 'தினக்குரல் வார இதழின்' முன்னாள் ஆசிரியருமான பாரதி ராஜநாயகம் - ஐபிசி செய்தி குழு (ஐபிசி தமிழ் தொலைக்காட்சி, வானொலி, லங்காசிறி, தமிழ்வின்) வழங்கியுள்ளனர்.

கிருபாகரன் தனது நன்றிகள், முன்னுரையில், தனது ஆக்கங்களை வெளியிட்ட அனைத்து ஊடகங்களுக்கும், இந்த ஆவணத்தை வெளியிட பல ஆண்டுகளாக ஊக்குவித்த நண்பர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளார். பல்வேறு நாடுகளில் இருந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் தனது அன்றாடப் பணிக்கு ஆதரவளித்த அனைவருக்கும் சிறப்பு நன்றி கூறப்பட்டுள்ளது. இரண்டு மொழிகளிலுமான வெளியீடுகள் - ஐரோப்பா, பிரித்தானியா, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் நாடுகளில் கூடிய விரைவில் விநியோகிக்கப்படுமென கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

## ஐரோப்பிய நாடொன்றிலிருந்து இலங்கை வந்த மர்ம பார்சல்

பெல்ஜியத்தில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட சந்தேகத்திற்கிடமான பார்சல் ஒன்று பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் நேற்று (செவ்வாய்க்கிழமை) மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் திறக்கப்படவுள்ளது எனப் பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவிற்கமைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் சந்தேகத்திற்கிடமான பார்சலைத் திறக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பார்சல் பெல்ஜியத்தில் இருந்து இலங்கையில் உள்ள போலி முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் போதைப் பொருள் இருந்ததாக சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக கோட்டை நீதிவான் நீதிமன்றத்திற்கு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவிற்கமைய, இந்த சந்தேகத்திற்கிடமான பார்சல் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

உரிமைகள் நிலைவரம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அந்த அமர்வில் பங்கேற்று நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாகத் தெளிவுபடுத்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன், அண்மைய காலங்களில் மனித உரிமைகள் நிலைவரம் மிகமோசமடைந்து வருவதாகச் சுட்டிக்காட்டினார். அதுமாத்திரமன்றி ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆதாரங்களைத் திரட்டுவதற்கான பொறிமுறைக்கு ஐரோப்பிய ஒன்றிய உறுப்புநாடுகள் நிதியுதவி உள்ளிட்ட ஒத்துழைப்புக்களை வழங்க முன்வர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

எனினும் அவரது கருத்துக்கள் உள்ளகப் பொறி முறை மற்றும் உள்நாட்டுக்கட்டமைப்புக்களின் ஊடாக நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிசெய்வது தொடர்பாகத் தாம் கொண்டிருக்கும் உறுதிப்பாடு தொடர்பில் சந்தேகங்களைத் தோற்றுவிக்கும் வகையில் அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்து 161 சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் , 47 அமைப்புக்களும் கையெழுத்திட்டு அறிக்கை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## களனி பல்கலை மாணவர்கள் தாக்கு: 9 பேர் பிணையில் விடுதலையாகினார்கள்

களனி பல்கலை மாணவர்கள் மீது தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் மகன் உள்ளிட்ட 9 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நேற்று (திங்கட்கிழமை) வத்தளை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ராகம மருத்து பீட மாணவர் விடுதி வளாகத்திற்குள் நுழைந்த அடையாளம் தெரியாத குழுவினரால் கடந்த முதலாம் திகதி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 4 மாணவர்கள் காயமடைந்த நிலையில் சம்பவம் தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் மகன் மற்றும் மருத்துவ பீட மாணவர்கள் என 9 பேர் கைது செய்யப்பட்டனர்

# மரத்துடன் வாகனம் மோதியதில் வவுனியாவில் இருவர் படுகாயம்




வவுனியா பம்பைமடுப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற கோரவிபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி இரும்பு கேடர்களை ஏற்றிவந்த கென்ரர் வாகனம் பம்பைமடு பகுதியில் வந்துகொண்டிருந்த போது வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நின்ற மரத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தின்போது வாகனத்தில் பலர் பயணித்திருந்த நிலையில் இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் சிறுகாயமடைந்தனர்.

விபத்து தொடர்பாக பூவசரங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 275**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 700.எப்படியானவை நடந்தன?

செயற்குழு தெரிவான பின்னர், பிரபாகரனுக்கு நிபந்தனையற்ற ஆதரவு தந்த கலாபதி, மனோ மாஸ்டரை அணுகி இந்தச் செயற்குழு என்பது பிரபாகரனை வெளியேற்றி, மக்கள் அமைப்புக்களை ஏற்படுத்தி, போராட்டத்தைத் திசை திருப்பும் திட்டம் என்றும், இது பிரபாகரனை வெளியேற்றும் சதி என்றும் தெரிவித்து, அதனைச் செயற்படுத்த விடக்கூடாது எனக் கூற, அதனால் மனோ மாஸ்டருக்கும் நந்தனுக்குமான முரண்பாடுகளில், மனோ மாஸ்டர் உண்மையான நோக்கம்



1971 இல் பிரபாகரன்

பிரபாகரனை வெளியேற்றுவதில் செயல்படுத்தப்பட்டு விட்டது என்ற நிலைப்பாட்டை எடுத்துப் பக்கம் மாற்றினார். அதில், முன்னர் சுந்தரம் போன்றோர் பிரபாகரனுக்கு எதிராக வைத்த தனிப்பட்ட குற்றச்சாட்டுக்களும் ஒன்று சேர, விவாதங்கள் தொடர்ந்து, செயற்குழுவிற்குப் பதிலாக பிரபாகரன் தலைமையில் ஒரு குழுவும், சுந்தரம் தலைமையில் இன்னுமொரு குழுவும் உருவாகி, தங்களுக்குத் தெரிந்த ஆயுதங்களைக் கைப்பற்றும் முயற்சிகளிலும் மற்றக் குழுவினரை கண்டால் முடித்து விடுவதிலும் குறியாக இருந்தார்கள். அது கோரமான – அசிங்கமான – நானா, நீயா என்ற அகங்காரத்தில் இருந்தது.

பிரபாகரனின் சர்வாதிகாரத்துக்கு மாற்றாக மக்கள் அமைப்புக்களை உருவாக்க வேண்டும் என்ற கருத்துக்களைத் தொடங்கியவரும், செயற்குழு கூட்டத்துக்காக அவற்றை நகர்த்தியவரும், இப்பொழுது ஒருநாள் முடிவில் பிரபாகரனுடன் நின்று செயற்பட்டமை பலராலும் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருந்தது. ஆனால் விடுதலைப் போராட்டங்களின் திருப்பு முனைகள் இவ்வகையான சம்பவங்களால்தான் உருவாகின்றன. மனோ மாஸ்டரைத் தொடர்ந்து மாத்தையாவும் சிலரும் பிரபாரன் பக்கத்தை நியாயப்படுத்தி, அவரை ஒதுக்கவே இவை நடத்தப்பட்டன எனச் சொல்லி, முத்தையன்கட்டு பகுதியில் சுந்தரம் குழுவினர் கையகப்படுத்திய ஆயுதங்களை மீளப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற அறிவித்தல்களும் தந்தன. சுந்தரத்தோடு மக்கள் சார்ந்த அரசியல் வழிமுறையில் நம்பிக்கை வைத்து, அது சாத்தியமான முறை என்றதை நம்பிய கணேசன் (ஐயர்) போன்றவர்களும் இருந்தார்கள். அவர்கள் ஆயுதங்களுக்காக இரத்தக் களரிகள் தங்களுக்கிடையே ஏற்படுவதை விரும்பாது – சுந்தரம் ஆயுதங்களை வைத்துக் கொள்ள வேண்டும் என அடம்பிடித்தாலும் – நாகராஜா, சாந்தன், குமணன், நந்தன் போன்றோர் மக்களுக்கிடையே சென்று வேலை செய்யவும் அரசியல் விழிப்பை உருவாக்கவும் ஆயுதங்கள் உடனடியாகத் தேவையில்லை என்பதால் அவற்றைக் கையளிக்க இணக்கம் ஏற்பட்டது. ராகவன் மூலம் இயக்கத்தின் ஆயுதங்கள் பணம் மற்றைய உரித்துக்கள் என்பன பிரபாகரனிடம் சேர்க்கப்பட்டன.

தமிழ் இளைஞர்கள் பொதுவாக நாட்டு நிலைமையால் – மாறிவரும் சமூக சூழ்நிலைகளால் – அவற்றின் தாக்கங்களினால் – அவற்றிலிருந்து தாங்கள் வெளியேறிவிட வேண்டும் என்று சிந்தித்தார்களே ஒழிய, போராட்டத்தைப் பற்றி நினைத்தமை மிகவும் குறைவாகவே இருந்தது. கல்வியை மூலதனமாக்கியோ அல்லது ஏதோ ஒரு முறையிலோ நாட்டை விட்டு வெளியேறவே முயற்சித்தார்கள். இப்படியான சமூகச் சூழ்நிலையில் இந்த தாக்கங்களையும், சுகபோகங்களையும் விட்டு விட்டுத் தாம் சார்ந்த சமூகத்தின் நலனுக்காக – அதன் விடிவுக்காக போராட முன்வந்த 50 முதல் 60 இளைஞர்களைக் கொண்ட விடுதலைப் புலிகள் இரண்டாகப் பிரிந்ததையும் அந்தப் பகை முரண்பாடாக, அகங்காரமாக, ஒருவரை ஒருவர் அழிக்க முயலும் உன்மத்தமாக உருவாகும் என செயற்குழு திட்டத்தை முன்வைத்தவர்கள் எதிர்பார்க்கவில்லை.

ஆயுதங்களையும் கையளித்த பின்னர் எஞ்சிய சிலர் அடுத்தவேளை உணவிற்கு என்ன செய்வது என நாள் கூலிகளாக சென்றார்கள். கொள்ளைகளில் ஈடுபடுவதில்லை என்றும் தீர்மானித்து கூலிகளிலிருந்தே செலவுகளைப் பார்த்து, ஒரு குழுவாக அரசியல் வேலைகளை முன்னெடுத்தனர். அதில் நாகராஜா, குமணன், நிர்மலன், சாந்தன், சுந்தரம், மதி, கண்ணன் போன்றவர்கள் இருந்தனர்.

மற்றக் குழுவில் பிரபாகரன், பண்டிதர், ராகவன், மனோமாஸ்டர், மாத்தையா, கலாபதி, சங்கர் போன்றோர் சேர்ந்திருந்தனர். விரக்திகளால் ஜோன், குமரப்பா, செல்லக்கிளி போன்றோர் இருபக்கமும் இல்லாமல் ஒதுங்கிச் சென்றனர். ஒற்றுமையும் கூட்டுறவும் வேப்பங்காயாகவே தொடர்ந்தது.



திருப்பதியில் மஹிந்த


### 701.இவை ஆதாரங்கள் கொண்டா மீளச் சொல்லப்படுகின்றன? இவை பக்கச்சார்பான கருத்துகள் இல்லையா?

தமிழ் மக்களின் இனப்படுகொலை இடியப்பம் மாதிரி. அதன் மேல் விரும்பியவர், விரும்பியவாறு சொதியோ, குழம்போ ஊற்றிப் பிசைந்து சாப்பிட்டு ஏப்பமும் விட்டுப் போயாயிற்று. அதில் உழைத்தவர்கள் சிலர். இன்னும் சிலர் வண்டி வரை தொங்கும் தங்க மாலைகளுடன் வண்டியைத் தடவிக் கொண்டு அரசியல் பேசுகின்றார்கள். கழுத்தில் குப்பியைக் கட்டிக் கொண்டு தமிழ் மக்களின் விடுதலைக்கென்று போராடிய ஒருவர் தற்பொழுது ஆபிரிக்க நாட்டின் கௌரவ தூதுவராக இருந்து பணிபுரிந்து தனது சொந்த விமானத்தில் கொழும்பு பறந்து வந்து அதே விமானத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் குடும்பத்தினரையும் திருப்பதி வெங்கடேஸ்வரரிடம் பிரார்த்தனைக்கு அழைத்துச் சென்றமை செய்திகளாகின. அதற்கு அவர், தான் தனி விமானம் வாங்கியது தனது சொந்தப் பணம் என்றும், தனது தனி விமானத்தில் பறந்து கொழும்பு வருவதோ அல்லது பணம் கொடுத்து இன்னுமொரு விமானச்சீட்டு வாங்கி வருவதோ தனது சொந்த விடயம் என்றும், அதைப்பற்றி யாருக்கும் விளக்கம் கொடுக்கத் தேவையில்லை என்றும் கூறுகின்றார். அதேபோல் தான் மஹிந்த ராஜபக்ஷவுக்கு விமானத்தை தந்தமையை மஹிந்த தனது நாடாளுமன்றத்தின் பதிவேடுகளில் 'தனிப்பட்டது' என்று பதிவிட்டுள்ளார், அது அவருக்கும் நாடாளுமன்றத்துக்கும் உட்பட்ட விடயம், ஆனால் நான் அப்பொழுதும், இப்பொழுதும், எப்பொழுதும் அவரது (மஹிந்தவின்) குடும்பத்தில் ஒருவனாக இருப்பேன் என கூளுரைத்துப் பதில் தந்தார்.

தனி விமானத்தில் பறந்து வருவதோ, பணம் கொடுத்து இன்னுமொரு விமானச்சீட்டு வாங்கி வருவதோ அவரது தனிப்பட்ட சொத்து. அவரது சொந்த விடயம். ஆனால் குப்பி கட்டி விடுதலைக்காகப் போராடப் புறப்பட்டவர் எப்படி இவ்வளவு சொத்துக்களுக்கு அதிபதியானார் என்று தமிழ் மக்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டுள்ளார். ஏனெனில் குப்பி கட்டியிருந்த காலத்திலிருந்தே குடும்பமாக இனப்படுகொலைக்கு உழைத்தார். ஏனெனில் அவரது விமானமே தாய்லாந்திலிருந்து பிரத்தியேகமாக வேண்டியவர்களைக் கொண்டு வர உதவியிருக்கலாம். இவர்கள் போன்றவர்கள் தாங்கள் தேடிய 'கறுப்புப் பணத்தை' 'வெள்ளையாக்க' – முதலீடுகள் செய்வதற்கு – தங்களுக்காக சமரசம் தேடுபவர்கள்.

அவர்கள் அங்கு போய் காணாமல் போன உறவுகளுக்காகப் போராடி நித்தம் வெய்யிலிலும் மழையிலும் வீதியில் நிற்பவர்களைச் சந்தித்து, முள்ளிவாய்க்காலுக்கு தங்களது குடும்பத்தவரோடு சென்று, முதல் ஆறுதல்படுத்தித் தேடியவர்களை அனுபவிக்க வேண்டும்.

இந்த இடியப்பத்தின் சிக்கல்கள் எப்படிப் பிசைந்து பிழியப்பட்டன என்பதை



சுந்தரம்

இந்தச் சம்பவங்கள் புரிந்துகொள்ள உதவும். சில உண்மைகள் உறைக்கலாம். உரசலாகவும் தெரியலாம். அவை பக்கச்சார்பானவைகள்தான். தமிழ் மக்களின் பக்கத்துக்காக – அவர்களின் எதிர்காலங்களுக்காக – இந்தச் சம்பவங்களில் பல பொதுவாகத் தெரியப்பட்டு இங்கு தரப்பட்டவை. சிலவற்றை அவற்றில் நேரடியாக ஈடுபட்டவர்களின் பதிவுகளிலிருந்தும், நான் நேரடியாகவே அறிந்ததும், அவர்களுடன் பேசியவற்றிலிருந்து பெற்றுக்கொண்டும் தருகிறேன்.

1984 இல் இருந்து பல பழைய போராளிகள் ஒவ்வொரு விடுதலைக் குழுக்களிலிருந்தும் அகதிகளாக வெளியேறினார்கள். அவர்கள் தந்த தகவல்கள் பதிவுகளைச் சான்றுபடுத்தியது.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள். அதுபோல இவர்கள் எப்படி முளைவிட்டு வளர்ந்தார்கள் என்பதின் பின்னணிகளை ஒரு திறந்த கோணங்களில் மக்கள் அறிந்து கொண்டால் அவை அதில் ஈடுபட்டவர்களின் மனோபாவங்களையும் குணாதிசயங்களையும் வெளிப்படுத்துவதைக் காணலாம்.

தமிழ் மக்கள் எவற்றிற்காகப் போராடினார்களோ அவை எப்படி ஒற்றுமையின்மையாலும், கூட்டுறவு அற்ற தன்மைகளாலும் சாத்தியமாகவில்லையோ, அவை மீள ஏற்பட ஒரு சந்தர்ப்பம் வரும் போது அவை அனைத்தும் இதே போக்குகளினால் மறுபடியும் குலைக்கப்படுகின்றன எனப் பலர் விரக்திக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

சமூகங்களின் சூழல்கள் மனிதர்களின் தன்மைகளை உருவாக்குகின்றன என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு ஒரு தனிமனிதன் வகித்த பாத்திரங்கள் வரலாறுகளின் பாதைகளில் திருப்பங்களை ஏற்படுத்துகின்றன. அந்த திருப்பங்களை அறிந்து கொள்ள – உணர்ந்து கொள்ள – இந்த பாத்திரங்களையும் புரிந்து வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

(வளரும்)



மாத்தையா, பிரபா, யோகி

காலைக்கதிர் Kalaikkathir

# அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை உடனடியாக விடுவிக்க ஜனாதிபதி கோட்டா உத்தரவு!

அத்தியாவசியப் பொருளகள் அடங்கிய கொள்கலன்களை உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

சுங்கத் திணைக்களத்தின் வசமுள்ள அத்தியாவசியப் பொருள்களை விடுவிப்பது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சந்தையில் உணவுப் பொருளகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடின்றி வழங்குவதற்காக, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவொன்றை நியமிக்கவும் கலந்துரையாடலில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகை காலத்தின்போது, உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடின்றி பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென குறிப்பிட்ட ஜனாதிபதி, அதற்காக தற்போது முதல் உரிய திட்டமிடல்களை மேற் கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். தெரிவு செய்யப்பட்ட சில அத்தியாவசியப் பொருள்களின் கொள்வனவுக்குச் சந்தர்ப்பம் வழங்குமாறும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.



## ஆயிரம் கிலோ ஹெரோயினுடன் கொஹுவலவில் பெண் கைது!



பெருந்தொகை ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது குறித்த பெண்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து ஒரு கிலோ 64 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது எனப்பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

கொஹுவல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வைத்தியசாலை வீதியில் களுபோவில பிரதேசத்தில் கடந்ததிங்கட்கிழமைமாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த ஹெரோயின் தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அதே பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவராவார்.

மேலும் விசாரணையில் சந்தேக நபரும் அவரது கணவரும் மற்றொரு கடத்தல்காரருக்கு போதைப் பொருள் விநியோகம்செய்து வந்தமைதெரிய வந்தது. சந்தேகநபர் நேற்று (செவ் வாய்க்கிழமை) கல்கிசை நீதிவான்நீதிமன்றில்ஆஜர்படுத்தப்பட்டார். பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக இந்தியா அழுத்தம் கொடுக்கவில்லை

### இப்படிக் கூறுகிறார் பீரிஸ்



தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக இந்தியாவிடம் இருந்து எவ்வித அழுத்தமும் பிரயோகிக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உள்ளக நிறுவன குறைபாடுகளே பிரச்சனைக்குக் காரணம் என்றும் அவை தீர்க்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மற்றும்படி அடிமட்ட அளவில் விரோதம் இல்லை என குறிப்பிட்ட அமைச்சர் இது எந்த வகையிலும் தீர்க்க முடியாத பிரச்சினை என நம்பப்படுகின்றது எனக் கூறினார்.

இதேவேளை நாட்டின் பொருளாதார நிலை மற்றும் சீனாவுடனான நாட்டின் உறவு தொடர்பாகவும் இந்திய ஊடகத்துக்கு ஜி.எல்.பீரிஸ் கருத்து வெளியிட்டிருந்தார்.

குறிப்பாக சுற்றுலாத்துறை வீழ்ச்சி மற்றும் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களிடமிருந்து கிடைக்கும் பணம் எம்மன குறைந்தமை காரணமாக நிதி அழுத்தத்துக்கு முகம் கொடுத்துள்ளார் எனத் தெரிவித்தார்.

மேலும் இரு நாடுகளுக்கிடையிலான மின்சார இணைப்பு மற்றும் கொழும்பு துறைமுகத்தில் மேற்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி குறித்தும் பேசப்பட்டது என ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

மின்சாரம் கிடைக்குமாக இருந்தால் அது பாரியளவில் நன்மை பயக்கும் என்றும் மேற்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி இரண்டு, மூன்று மாதங்களில் தொடங்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்க பொறுப்பேற்பு!





கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக ஆளுநரால் நியமிக்கப்பட்ட எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்க கடந்த திங்கட்கிழமை திருகோணமலையில் அமைந்துள்ள மாகாணக் கல்வி அமைச்சில் தம் கடமைகளைச் சுபநேரத்தில் ஆரம்பித்தார்.

கிழக்கு மாகாணக் கல்விச் செயற்பாடுகளைச் சிறந்த நிலைக்குக் கொண்டுவர அனைவரது ஒத்துழைப்பை வழங்குமாறும் அதற்காக தம்மிடம் வழங்கப்பட்ட இப்பாரிய பொறுப்பிற்கான கடமைகளை மேற்கொள்ளவுள்ளார் என அவர் இதன்போது தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர் கூறியவை வருமாறு;

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் 3 லட்சத்து 85 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களும் 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் சுமார் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட கல்வித்துறை உத்தியோகத்தர்களும் உள்ளனர்.

கிழக்கு மாகாண சபையிலே உள்ள ஒட்டுமொத்த ஆளணியில் அரைவாசிப் பேர் கல்வியமைச்சிலேயே காணப்படுகின்றனர். எனவே மிகவும் வேலைப்பளுமிக்க ஓர் அமைச்சாக இந்த அமைச்சு காணப்படுகின்றது.

கல்வித்துறையில் முன்னேற்றகரமான மாற்றத்தை ஏற்படுத்தத் தமக்கு ஏற்படுத்த முடியும் என்ற விசுவாசத்தின் பேரில் ஆளுநர் இப்பதவிக்கு தம்மை நியமித்தார் எனவும் அதற்கேற்ப செயற்பாடுகள் கிரமமாக மேற் கொள்ளப்படும் என்றும் இதன்போது அவர் மேலும் தெரிவித்தார்.

2000 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்குள் நுழைந்த இவர் தன்னுடைய முதல் பட்டத்தை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வணிகத் துறையிலும் இரண்டாவது பட்டத்தை எம்.ஏ (பொது நிர்வாகம்) இந்தியாவிலும் எம்.எஸ்.எஸ்.சி பட்டத்தை களனி பல்கலைக்கழகத்திலும் எம்.பி.எ பட் டத்தை சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலும் எல்.எல்.பி பட்டத்தை ஐக்கிய இராச்சிய பல்கலைக் கழகத்திலும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்.

அத்துடன் நல்லாட்சி தொடர்பான டிப்ளோமா பாடநெறியை ஐக்கிய இராச்சியத்தின் இலினோ பல்கலைக்கழகத்திலும் இவர் பூர்த்தி செய்துள்ளார். மத்திய மாகாண சபையில் மாநகர ஆணையாளர், பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், விசேட ஆணையாளர் பதவிகளையும் வகித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையில் நீண்ட அனுபவம்கொண்ட இவர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், பிரதி பிரதம செயலாளர்(நிர்வாகம்), மாகாண காணி ஆணையாளர், முன்பள்ளி பாடசாலை பணியகத் தலைவர் ஆகிய பதவிகளையும் இதற்கு முன் வகித்துள்ளார்.

மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் பதவி ஏற்க முன்னர் பிரதம செயலாளர் (நிர்வாகம்) பதவியை இவர் தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபை அமைச்சின் செயலாளர்கள், சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரிகள், சக உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# உயர்தரப் பரீட்சையில் வினாத்தாள்கள் காலதாமதமாக வழங்கப்பட்டது என மாணவர்களும், பெற்றோரும் விசனம்!





கல்விப் பொதுத்தர உயர்தரப் பரீட்சை கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு (களுவாஞ்சிக் குடி) தேசிய பாடசாலை பரீட்சை நிலையத்தில் நடைபெற்ற பரீட்சையின் போது வினாத்தாள்கள் கால தாமதமாக வழங்கப்பட்டன என மாணவர்களும், பெற்றோரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இணைந்த கணிதபாட பரீட்சையின் போது, வழங்கப்பட்ட வினாத்தாள்களில் முதலாம் பகுதியும், இரண்டாம் பகுதியும், காலை 8.30 மணிக்கே மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் குறித்த தாள்களில் இரண்டாம் பகுதி வினாத்தாள் காலை 8.30 மணிக்கு வழங்கப்பட்டிருந்ததோடு, மற்றைய முதலாம் பகுதி வினாத்தாள் இன்னும் வழங்கப்படவிலலையே சேர் என மாணவர்கள், பரீட்சை மேற்பார்வையாளரிடம் கோரியதற்கிணங்க, அதன் பின்னர் காலை 10 மணியளவில் மற்றைய வினாத்தாள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது எனவும், எனினும் பரீட்சை வினாத் தாள்கள் 11.40 மணிக்கு சரியாக முடிவுறுத்தப்பட்டதாகவும், மாணவர்களும், பெற்றோரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக பெற்றோர் பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்துக்குச் சென்று தமது பிள்ளைகளுக்கு நடந்த அநீதி தொடர்பில் எழுத்துமூலம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இந்த விடயம் அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர், இரா.சாணக்கியன், பட்டிருப்பு வலயக்கல்வி அதிகாரிகளுடனும், பெற்றோர்களுடனும், கலந்துரையாடினார்.

கடந்த திங்கள் நடைபெற்ற பரீட்சையின் போது மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட தவறு தொடர்பாக பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதாக வலயக்கல்விப் பணிப்பாளர் தன்னிடம் தெரிவித்தார் என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

எனினும், மாணவர்களுக்கு நடந்த அநீதி தொடர்பில், தான் கல்வி அமைச்சரை நேரில் சந்தித்து அவரது கவனத்திற்குக் கொண்டு செல்லவுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டின் மின்வலு மற்றும் எரிசக்தித் துறைகளை இந்தியாவும், அமெரிக்காவும் கட்டுப்படுத்துகின்றன

### ரஞ்சித் மத்துமபண்டார சுட்டிக்காட்டு

நாட்டின் மின்வலு மற்றும் எரிசக்தித் துறைகளை இந்தியாவும், அமெரிக்காவும் கட்டுப்படுத்துகின்றன என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் நாட்டு மக்களின் அனைத்து உரிமைகளையும் முடக்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழு தனது கடமையைச் செய்யத் தவறியுள்ளது எனவும், முன்னறிவித்தல் இன்றி மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

கெரவலபிட்டிய யுகதனவ் மின் உற்பத்தி நிலையம் அமெரிக்க நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். கடன் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் முனைப்பு காட்டவில்லை எனவும் சர்வதேச சமூகத்திடம் பிச்சை ஏந்திக் கொண்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு பெரும் நெருக்கடி நிலையை எதிர் நோக்கியுள்ளது எனவும் கடன் வழங்கும் நிறுவனங்கள் இலங்கைக்கு கடன் வழங்குவதை நிறுத்திக் கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## யாழில் போதைப்பொருளுடன் சகோதரர்கள் இருவர் கைது

யாழ். ஏழாலைப் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் 22 வயது மற்றும் 29 வயதான சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், சுன்னாகம் பொலிஸாரும் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் இருந்து 3 கிராம் 58 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தாதியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்களின் போராட்டம் 2 ஆவது நாளாகவும் முன்னெடுப்பு!

தாதியர்கள் உள்ளிட்ட 18 சுகாதார சேவை தொழிற் சங்கங்கள் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பு போராட்டம் 2ஆவது நாளாக நேற்றும் (செவ்வாய்க்கிழமை) தொடர்ந்தது.

சம்பள உயர்வு உள்ளிட்ட 7 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் உள்ளிட்ட 18 சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் கடந்த திங்கட்கிழமை காலை முதல் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இதன் காரணமாக பல வைத்தியசாலைகளின் சேவைகள் பாதிப்படைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதான 11 இந்திய மீனவர்களும் மறியலில்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்., நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 11 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

நேற்று அதிகாலை நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 3 இந்திய இழுவைப்படகுகள் கடற்படையினரால் மீட்கப்பட்டன. அதில் இருந்த 11 பேர் கைதுசெய்யப்பட்டு மயிலிட்டித் துறைமுகப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டு நேற்றுக் காலை யாழ். மாவட்ட நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களை நீரியல்வள திணைக்கள அதிகாரிகள் இன்று மதியம் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். இதனைத் தொடர்ந்து அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் முன்னேற்றம் தொடர்பில் விசேட ஆய்வு!



நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் மற்றும் பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் அப்துல் ரஹீம் ஆகி யோர் கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம். தௌஃபீக் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

மேற்படி சந்திப்பில் அண்மையில் தரம் - ஏ ஆக தரமுயர்த்தப்பட்ட பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் அடுத்த கட்ட முன்னேற்றம் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது.

அதற்கிணங்க மாகாண சுகாதார பணிப்பாளர் விரைவில் பொத்துவில் வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்கு ஒதுக்கீடு செய்ய வேண்டிய ஆளனி வெற்றிடங்கள் தொடர்பாக முடிவு செய்வதாகவும், நோயாளர் பதிவேட்டு முறைமையைக் கணினி மயப்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்து வைப்பதாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழ் ஊடக உலகை வாசகர்கள் நம்பாத – நம்பமுடியாத – நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்று நான் நினைக்கிறேன்.

இப்படியான 'பப்பா மரத்தில் ஏற்றும் செய்திகள்' நமது சமூகத்துக்கே பெரும் விமுக்காடு. இத்தகைய செய்தியை நம்பி, அதில் காத்திரமான நடவடிக்கை எடுக்க முனையும் தமிழ்த் தரப்புகள் கடைசியில் செய்தி பொய் எனும் போது மூக்குடைபட்டு அடங்கிப் போய் விட வேண்டியதுதான்.

இந்தச் செய்தியைப் பிரசுரித்த இணையங்கள், மூல சூத்திரதாரியைத் தேடிக் கண்டு பிடித்து, அடையாளப்படுத்தி, புறமொதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்போதுதான் ஊடகங்கள், மீது வாசகர்களுக்குக் கொஞ்சமாவது நம்பிக்கை வரும். இல்லையேல் அந்தக் காலத்தில் செய்திகளை வெளியிட்ட 'லங்கா புவத்' செய்திகளுக்கு தமிழ் மக்கள் கொடுத்த மரியாதைதான் எங்கள் ஊடகங்களுக்கும் மிஞ்சும்.

ஊடகத்துறையை கேவலமாகப் பயன்படுத்தும் கோடரிக் காம்புகள் மீதான சீற்றத்துடன் இந்தப் பதிலை வாசகர்கள் முன் வைக்கிறேன்.

– மின்னல் –

## 52 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வைக்கப்பட்ட நிலையில், ஜனவரி 25 ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களைத் தாயகம் அனுப்பஏற்பாடுகள் செய்யப்பட்ட வேளை, இவர்களில் 43 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது.

இதனால், இயக்கச்சி இடைத்தங்கல் முகாமில் குறித்த மீனவர்கள் பராமரிக்கப்பட்டு மீண்டும் பரிசோதனையின் பின்பு 43 பேரும் மீரியானைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். எஞ்சிய 13 பேருக்கு மேற்கொண்ட பரிசோதனையில் 4 பேர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியிருந்தனர்.

இதனால் 13 பேரில் 9 பேரும், இயக்கச்சியில் இருந்து வெளியேறிய 43 பேருமாக மொத்தம் 52 பேர் நாளை இரவு நாடு திரும்பவுள்ளனர்.

இதேவேளை, இந்த ஆண்டு கைது செய்யப்பட்ட மேலும் 32 இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தங்கம் வென்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பயணத்தின் விளைவாக பாராட்டத்தக்க பெறுபேற்றைப் பிறந்த தாய்நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்தமைக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவருக்கு நிதி உதவியையும் இதன்போது வழங்கி வைத்தார்.

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

க.மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா பரவலானது அதிகரித்துச் செல்கின்றது. ஜனவரி மாத முற்பகுதியில் இருந்து கொரோனா பரவல் அதிகரித்துச் செல்லும் நிலைமை காணப்படுகின்றது.

இந்த அதிகரிப்பு ஆரோக்கியமானதாக இல்லை. தற்போது அனைத்துச் செயற்பாடுகளும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் குறிப்பாக போக்குவரத்து, கற்றல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு வரும் நிலையில் கொரோனாத் தொற்றின் நிலை மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ளது எனச் சுகாதாரத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

ஆகவே, சுகாதார அமைச்சால் இறுதியாக வெளியிடப்பட்ட சுகாதார நடவடிக்கைகளுக்கு அமைவாக பொதுமக்கள் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கட்டாயமாக முகக்கவசம் அணிய வேண்டும். மேலும் ஒன்றுகூடல்களைப் பாதுகாப்பான முறையில் மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக தேவையற்ற பயணங்கள், நடமாட்டங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். தற்போதைய நிலையில் தடுப்பூசி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 62 வீதத்துக்கு மேற்பட்டோர் முதலாம் கட்டத் தடுப்பூசியையும், அதற்குக் குறைவானவர்கள் இரண்டாம் கட்டத் தடுப்பூசியையும் பெற்றுள்ளனர். பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்பவர்கள் சற்றுக் குறைவாக இருந்தபோதும் தற்போது மக்கள் ஆர்வம் காட்டி இந்தத் தடுப்பூசியைப் பெற்று வருவது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஆகவே, இந்தத் தடுப்பூசியை முறையாகப் பெற்றுக்கொள்வது சுகாதாரப் பகுதியினரால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. எனவே, பொதுமக்கள் வீண் வதந்திகளை நம்பாது தடுப்பூசிகளைத் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் டெங்கு காய்ச்சலும் அதிகமாகக் காணப்படுகின்றது. புள்ளிவிபரத்தின்படி யாழ். மாவட்டம் டெங்கு அபாய வலயமாகக் காணப்படுகின்றது. எனவே, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனையோருடன் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஒன்றிணைந்து செயற்படுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மேலும், இங்கு மலேரியா அபாயம் இருந்தபோதும் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. பொதுமக்கள் மிகவும் அவதானமாகச் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் – என்றார்.

## சுயலாப அரசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நகர்ந்து வருகின்றோம்.

இந்நிலையில், 13ஆவது திருத்தத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது படுமுட்டாள்தனமானது. இப்படியான செயற்பாடு, இருப்பதையும் இழப்பதற்குச் சமமானது. அதனால்தான் 13ஆவதுதிருத்தச் சட்டத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரி வருகின்றோம் – என்றார்.

## 'திருமலை எண்ணெய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஒப்பந்தம் மற்றும் அதன் இணைப்புகளுடன் சபையில் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார்.

அதேபோல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் என மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்ட 'எண்ணெய்த் தாங்கிகள் மீண்டும் எமது நாட்டுக்கு' என்ற அறிக்கையையும் சபையில் சமர்ப்பிப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்றுமுன்தினம் மாத்திரம் 35 பேர் பலியாகியுள்ளனர்.

22 ஆண்களும், 13 பெண்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 656 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் நாளாந்தம் சடுதியாக அதிகரித்து வருகின்றது.

## காங்கேசன்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அத்துமீறி மீன்பிடித்த வேளை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் ட்ரோலர்படகுகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் ஏலத்தில் விடப்படுகின்றன. இதற்கமைய நேற்று காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் தரித்து வைக்கப்பட்டிருந்த 5 படகுகள் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளால் ஏலத்தில் விடப்பட்டன. இதன்போதே இந்த 5 படகுகளும் 4 இலட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன.

இதேவேளை, இன்று கிளிநொச்சி மாவட்டம், கிராஞ்சியில் தரித்து வைக்கப்பட்டுள்ள இந்தியப் படகுகள் ஏலத்தில் விடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வடக்கு – கிழக்கு 'தமிழர் தாயகம்' என்பதை உறுதிசெய்து இலங்கைக்கு உதவிடுங்கள்

## இந்தியாவிடம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை



இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் 1.4 ஆம் சரத்தில் குறிப்பிட்டவாறு, இலங்கைத்தீவின் வடக்கு – கிழக்கு பகுதி தமிழர்களின் தாயகம் என்பதை உறுதி செய்தே, இலங்கைக்கான உதவிகளை இந்தியா வழங்க வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தமிழ்நாடு தோழமை மையம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் –

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வமாக இலங்கை யின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்தியாவுக்கு வருகை தந்துள்ளார்.

இலங்கை மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வரும் நிலையில்,

இந்தியாவின் உதவிகளை உறுதிப்படுத்தவும், இந்தியாவின் பொருளாதார முதலீட்டு முயற்சிகள், மீனவர்கள் விவகாரம், இலங்கையின்னரிசக்திபாதுகாப்பை மேம் படுத்தல் உட்பட பல விடயங்கள் பேசப்பட இருக்கின்றன என இலங்கை செய்திகள் தெரிவிக்கின்றன.

பொருளதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி, மருந்துவத் தேவைகள் உட்பட மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கான இந்தியாவின் உதவிகள் இந்திய தேசத்தின் மனிதாபிமானத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன.

குறிப்பாக இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் 1.4ஆம் சரத்தில் உறுதி செய்யப்பட்ட இலங்கைத்தீவின் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் பகுதியில், இடம்பெற்று வரும் நில அபகரிப்பு மற்றும் சிங்களக் குடியேற்றங்கள், ஒப்பந்தத்தின் அச்சரத்தை அழித்து வருகின்றன என அமைகின்றது.

இந்நிலையில், இலங்கைக்கான இந்தியாவின் உதவி வழங்கல் என்பது இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் 1.4ஆம் சரத்தை உறுதி செய்தே வழங்கப்பட வேண்டும் எனக் கோருகின்றோம் – என்றுள்ளது.

# ஆரியகுளத்தில் விபத்து; அல்வாய் இளைஞர் பலி!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.09

யாழ்., ஆரியகுளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த இந்திர சிங்கம் நிருபன் (வயது – 32) என்ற இளைஞரே இந்த விபத்தின்போது உயிரிழந்துள்ளார்.

வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மினி பஸ் மீது மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அரச நிறுவனம் ஒன்று பணிபுரிந்து வரும் குறித்த இளைஞர் தனது பணி நிமித்தம் நேற்று அதிகாலை சென்ற வேளை குறித்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கைக் கடற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தியக் கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுடன் நேற்று நடத்திய காணொலி–மூலமான கலந்துரையாடலிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழகத்தில் அமைந்துள்ள இந்தியாவுக்கான இலங்கையின் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்த கடற்றொழிலாளர் பிரதிநிதிகள், தொப்புள் கொடி உறவுகளான தங்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொண்டு மாற்றுத் தொழில் முறையில் ஈடுபடும் வரைக்குமான கால அவகாசத்தை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும், கைப்பற்றப்பட்டுள்ள தங்களின் மீன்பிடிப் படகுகளை ஏலத்தில் விற்பனை செய்கின்ற செயற்பாடுகளையும் மீள்பரிசீலனை செய்யுமாறும் இந்தியக் கடற்றொழிலாளர் பிரதிநிதிகளால் கோரப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பண்பாட்டு, கலாசார ரீதியாகவும், பல்வேறு தேவைகள் காரணமாகவும் தமிழக உறவுகளுடனான தொப்புள் கொடி உறவு வலுப்படுத்த வேண்டும் என்பதை உளமாரத் தான் எதிர்பார்க்கிறார் எனவும், அதற்காக இலங்கையின் கடல் வளம் அழிந்து போவதை அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

அதேபோன்று, பயன்படுத்த முடியாதவை என்ற அடிப்படையில் இந்தியக் கடற்றொழிலாளர்களால் கைவிடப்பட்ட மீன்பிடிப் படகுகளே இலங்கையில் ஏலமிடப்படுகின்றன எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

மேலும், பேச்சுகளை நடத்தி ஒரு சுமுகமான தீர்வைக் காண்பதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், பேச்சு மூலம் சுமுகமான தீர்வை எட்டுவது ஒருபுற மிருக்க, இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்து சட்டவிரோத தொழிலில் ஈடுபடுவதை இந்தியக் கடற்றொழிலாளர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

நேற்றைய காணொலி மூலமான கலந்துரயாடலில், நாகைப்பட்டினம், இராமேஸ்வரம் உள்ளிட்ட தமிழகத்தின் தென் மாவட்ட கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அகில இலங்கை மீனவர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தால் அமைச்சுக்கு முன்பாக பதற்றமான சூழல் உருவானதுடன், அமைச்சருடன் கலந்துரையாடல் ஒன்றின் அவசியத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இதனடிப்படையில், ஐந்து பிரதிநிதிகள் கலந்துரையாடுவதற்கு அமைச்சுக்கு அழைக்கப்பட்டனர். அத்துடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வெளியே வந்து போராட்டக் குழுவினருடன் கலந்துரையாடினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

இந்தியமீனவர்களைக்கைதுசெய்யும் நடவடிக்கைகள் ஏற்கனவே இடம்பெற்று வருகின்றன. இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைவது தற்போது தடுக்கப்பட்டுள்ளது. எல்லை மீறி வரும் இந்திய மீனவர்கள் தற்போது கைது செய்யப்படுகின்றனர் – என்றார்.

# வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் வாக்குறுதிகளை இந்தியா நம்பக்கூடாது

## சி.வி.விக்கினேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



இந்தியாவை தனது நட்பு நாடென காட்டிக்கொள்ளும் விதமாக, இந்தியாவிற்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி இந்தியாவை ஏமாற்றும் இலங்கை அரசாங்கத்தின் மற்றுமொரு நடவடிக்கையாகவே இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் இந்திய விஜயம் அமைந்துள்ளது.

எனவே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் வாக்குறுதிகளை நம்பி இந்தியா ஏமாந்துவிட வேண்டாம் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்பாக சுயாதீனமாக சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை இந்தியா நேரடியாக வலியுறுத்த முடியாவிட்டாலும் ஏனைய நாடுகளின் ஊடாக சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதற்கு உரிய இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் இரண்டு நாள்களுக்கான இந்திய விஜயம் தொடர்பாக 'டைம்ஸ் ஒப் இந்தியா' ஊடகம் சி.வி. விக்கினேஸ்வரனிடம் இணையவழி நேர்காணல் ஒன்றை முன்னெடுத்திருந்த நிலையில் அவர் இந்த கருத்துக்களை பகிர்ந்துகொண்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

இலங்கை வெளிவிவகார அமைச்சரின் இந்திய விஜயம், இந்தியாவை ஏமாற்றும் இலங்கை அரசாங்கத்தின் மற்றுமொரு நடவடிக்கையாகும். இந்தியாவைத் தனது நட்பு நாடென காட்டிக்கொள்ளும் விதமாக, இந்தியாவிற்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி இலங்கைத் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு விடயத்தில் இந்தியா தலையிடாது என்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்த விஜயம் அமைந்துள்ளது.

அதேபோல் இலங்கையில் சீனாவின் விருப்பத்தை முன்னெடுக்கும் கொழும்பின் தீர்மானங்களில் இந்தியா ஆத்திரப்படாமல் இருப்பதற்காக அதற்கான சமாதானப்படுத்தல்களை முன்னெடுக்கும் விதமாகவும் இந்த விஜயம் அமைந்துள்ளது. இதுவே, இலங்கையின் திட்டமாகும். தமிழ் மக்களாகிய எமக்கு அதிகாரப்பகிர்வு வழங்கப்படும் என்பது உள்ளிட்ட இந்தியாவிற்கு கடந்த காலத்தில் வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் இந்திராகாந்திக்குப் பிறகு தோல்வியடைந்துள்ளது என்பதை வருத்தத்துடன் கூறிக்கொள்கின்றேன். இதனாலேயே இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிக்கவும் காரணமாக அமைந்துள்ளது.

எவ்வாறிருப்பினும், இந்திய பிரதமர் நரேந்திர மோடி மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. தனிப்பட்ட முறையிலும் அவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் குஜராத் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் நான் அங்கு சென்றிருக்கிறேன், அப்போது அவரது செயற்பாடுகளில் மிகவும் ஈர்க்கப்பட்டேன். அவர் இலங்கையின் பொய்யான வாக்குறுதிகளை நம்பாமல், இலங்கை தொடர்பில் மிகவும் கவனமாக தீர்மானம் எடுப்பார் என நம்புகிறேன்.

இலங்கையில் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்த இந்திய பிரதமர் துணிச்சலான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இலங்கைத் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்தியாவால் எவ்வளவு தூரத்துக்கு எமது அதிகாரங்களை பலப்படுத்த முடியுமோ அதுவே இந்தியாவின் பாதுகாப்பிற்கும் கைகொடுக்கும்.

எனவே, எமது நாட்டின் வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தின் மூலம் எனது ஒரே எதிர்பார்ப்பு, பேராசிரியர் பீரிஸின் பேச்சுத்திறனைக்கண்டு இந்தியா ஏமாந்து விடக்கூடாது என்பதுதான்.

நாங்கள் இந்தியாவிடம் அதிகம் எதையும் கேட்கவில்லை, ஏனென்றால் இந்தியா வழங்கிய 13 ஆவது திருத்தம் நமது அரசமைப்பில் உள்ளது, இது அரசமைப்பில் உள்வாங்கப்பட இந்தியாவே காரணமாகும்.

1987 இல் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தில் தமிழர்களாகிய நாம் கையொப்பமிடவில்லை. மாறாக, எங்களின் சார்பாக இந்தியாதான் கையெழுத்திட்டது என்பத்தை மறந்துவிடக்கூடாது. இந்நிலையில் இலங்கை அரசாங்கம் புதிய அரசமைப்பை உருவாக்க முயற்சிகளை முன்னெடுக்கின்றது. அதில் 13 ஆம் திருத்தத்தை முற்றுமுழுதாக நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

ஆகவே, 13 ஆம் திருத்தத்தை புதிய அரசமைப்பில் இருந்து எவ்வாறு நீக்க முடியும் என்பதை கேட்கும் அதிகாரமும் அதற்கான தார்மீகக் கடமையும் இந்தியாவிற்கு உள்ளது.

அதுமட்டுமல்ல, இலங்கையில் சீனாவின் உள்நுழைவுடன், இந்தியாவிற்கு முன்பை விடவும் அதிகளவான கவலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக வடமாகாணத்தில் உள்ள மூன்று தீவுகள் இந்தியாவிற்கு மிக அருகில் அதாவது 52 கிலோமீற்றர் தொலைவில் உள்ளன. அந்தத் தீவுகளில் மின்சாரம் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயற்படுத்த சீனா முயற்சித்து வருகிறது. இந்த செயற்பாடுகளை இந்தியா சாதரணமாகக் கருதி வேடிக்கை பார்க்க முடியாது.

எனவே, எம்மைப் பாதுகாக்கவும், எமக்கு உதவுவதும் இந்தியாவின் சொந்த நலன்களையே பாதுகாக்கும். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்களைப் பாதுகாப்பதன் மூலம், இந்தியா தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். மேலும் இவ்விரு மாகாணங்களின் தமிழர்களாகிய நாம், சீனாவுக்கு மாறாக இந்தியாவுக்கு மிகவும் சாதகமாக இருப்போம் என்பதில் இந்தியா உறுதியாக இருக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் பல வழிகளில் சீனர்களை கவர்ந்திழுத்து, ஏற்கனவே தென்னிலங்கையில் 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை சீனாவிற்கு 99 வருட குத்தகைக்கு வழங்கியுள்ள நிலையில், இந்தியா இனி யாவது மிகக்கவனமாக செயற்பட வேண்டும்.

எமது சகல பிரச்சினைகளையும் 13 ஆம் திருத்தத்தின் மூலமாக மட்டுமே தீர்க்கப்போவதில்லை. ஆனால், தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசை கேள்வி கேட்க இந்தியாவுக்கு இருக்கும் ஒரே வழிமுறை இதுவேயாகும். அது தவிர, அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் கவனத்தில்கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசங்களில் சிங்களவர்களை அனுமதித்து புதிய குடியேற்றங்களில் ஏற்படுத்தி, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்பதே உண்மையாகும்.

இப்போதைய ஒற்றையாட்சி அரசமைப்பு அனைத்து அதிகாரங்களையும் மத்திக்கு கொண்டு சேர்க்கின்றது. ஆகவே தான் சமஷ்டி அரசமைப்பின் மூலமாக அதிகாரங்களைப் பகிர முடியும். எமது கடிதத்தில் இதனையே நாம் முன்வைத்துள்ளோம்.

மேலும், பிளவுபட்டநாடாக அல்லாது ஒன்றிணைந்த நாட்டில் வாழவேண்டும் என்பதையே தேர்தலில் வெற்றி பெற்ற எமது சகல கட்சிகளும் கேட்கின்றனர். எந்தச் சூழ்நிலையிலும் நாம் தமிழர்களுக்கான தனி நாடு என்ற கொள்கைக்கு திரும்பப் போவதில்லை.

உண்மையில், இலங்கையின் வடக்கு அல்லது கிழக்கில் விடுதலைப்புலிகளின் மீள் எழுச்சிக்கான அறிகுறியே தென்படவில்லை. நாம் கேட்கும் சமஷ்டி அலகு என்பது தனி நாடு என அர்த்தப்படாது. வடக்கு மற்றும் கிழக்கில் அதிக அதிகாரப் பகிர்வை நாங்கள் விரும்புகிறோம். ஆனால் நாங்கள் தனி நாட்டையே கேட்கின்றோம் என்பதையே இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக கூற முற்படுகின்றது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்பாக சுயாதீனமாக சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையே 2009 ஆம் ஆண்டு தொடக்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் தமிழ் மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். அப்போது, இராணுவத்தில் இருந்த எனது நண்பர்கள், எமது அப்பாவி மக்களை சுட்டுக் கொல்ல உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை தொடர்பில் எமக்குத் தகவல் கொடுத்தனர்.

அதேபோல் அயல் நாடான இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை முன்னெடுக்க ஆதரிப்பதில் இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய சங்கடத்தை என்னால் விளங்கிக்கொள்ள முடிகின்றது. ஆனால், இந்தியாவால் இந்த விடயத்தை நேரடியாக வலியுறுத்த முடியாவிட்டாலும் ஏனைய நாடுகளின் ஊடாக சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதற்கு உரிய இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுக்க முடியும்.

னைச் செய்யவும் வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கை தொடர்பில் கடுமையான அறிக்கை ஒன்றை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைக் கண்டிப்பாக இந்தியா ஆதரிக்க வேண்டும்.

மிக முக்கியமாக, இலங்கைத் தமிழ் மக்களின் வடக்கு மற்றும் கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களுக்காக எமது நிலங்கள் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்படுவதை நிறுத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஊடாக இந்தியா அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாறான ஆக்கிரமிப்பு செயற்பாடுகள் இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமன்றி இந்தியாவிற்கும் எதிர்காலத்தில் மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலாக அமையும். ஆகவே, இவற்றைத் தடுக்க இந்தியாவும் இலங்கைத் தமிழர்களும் ஒருவருக்கொருவர் உதவ வேண்டும்.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர், எஸ். ஜெய்சங்கர் எங்களின் நண்பர். அவர் இங்கே இருந்தார், இந்த விடயங்களை எல்லாம் நன்கு அறிந்தும் இருந்தார். ஆகவே, இந்தியா எமக்கு உதவும் என நாம் நம்புகின்றோம் என அவர் கூறியுள்ளார்.

# சமாதானம் பற்றிய உலக மாநாட்டில் உரையாற்ற தென்கொரியா செல்கின்றார் மைத்திரிபாலசிறிசேன

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று தென் கொரியாவிற்கு பயணமானார்.

சமாதானம் தொடர்பிலான உலக மாநாடு ஒன்றில் உரையாற்றும் நோக்கில் அவர் இவ்வாறு தென் கொரியாவிற்கு விஜயம் செய் துள்ளார்.

157 உறுப்பு நாடுகளின் பங்குபற்றலுடன் நடைபெறும் இந்த மாநாட்டில் ஆரம்ப நிகழ்வின் பிரதான உரையாற்றுவதற்கு மைத்திரிபால சிசேனவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு, இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு, ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் பான் கீ மூன் அழைப்பு விடுத்துள்ளார்.

தென்கொரியா புறப்பட்டுச் சென்ற மைத்திரி எதிர்வரும் 14 ஆம் திகதி நாடு திரும்புவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கும் அதிகரிக்கப்படுகின்றது சம்பளம்!

*அதிபர் - ஆசிரியர் சம்பள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல் தொடர்பான அமைச்சரவை தீர்மானத்திற்கமைய வெளியிடப்பட்டுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இல் ஏற்பாடுகளை பிரிவெனா ஆசிரியர்கள், அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விசேட உதவிப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஏற்புடையதாக்கிக் கொள்வதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.02.2022இல் வெளியிடப்பெற்றது.